# யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை

| தரம் - 11 | 80 - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|---|

*பகுதி – I*

***பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க***

**01.** கூட்டற்பொறி (Adding Machine) கண்டுபிடித்தவர்
1. Blaise Pascal  2. Charles Babbage  3. Joseph Jacquard  4. Ada Lovelace

**02.** UNIVAC, ENIAC என்பன எத்தலைமுறைக் கணினிக்கு உதாரணங்களாகும்.
1. இரண்டாம் தலைமுறை  2. முதலாம் தலைமுறை  3. நான்காம் தலைமுறை  4. ஐந்தாம் தலைமுறை

**03.** பின்வருவனவற்றுள் எது பண்பறி தகவலின் இயல்புகள் அல்லாதது
1. பொருத்தப்பாடு  2. செம்மை  3. கிரயம் இழிவளவாதல்  4. வேகம்

**04.** G2E க்கு உதாரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது ?
A – வர்த்தகமானி  B – சுற்றுநிருபங்கள்  C – படிவங்கள்
D – பிறப்புச் சான்றிதழ் நிகழ்நிலை மூலம் பெறல்
1. ABCD  2. ABC  3. BCD  4. ACD

**05.** இதயத்தின் பல்வேறு தொற்று நிலமையை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் பொறி யாது ?
1. காந்தப் பரிவு விம்பமாக்கற் பொறி (MRI)  2. மின் இதயவரையப் பொறி (ECG)
3. இதய நோய்த் திரையிடற் பொறி (CSM)  4. கதிர்ப்பொறி (CAT)

**06.** அனாவசிய நீர் நுகர்ச்சியைத் தவிர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் பொறி
1. தன்னியக்க முறையாக நீர் வழங்கும் பொறி  2. பயிரிடும் நிலத்தின் நிலமையை அளவிடும் பொறி
3. தன்னியக்க களையகற்றும் பொறி  4. ரோபோ

**07.** சாவிப்பலகையில் உள்ள சாவிகளின் எண்ணிக்கை
1. 98 – 102  2. 111 – 114  3. 90 - 95  4. 80 - 90

**08.** வங்கிகளில் காசோலையின் செம்மைத் தன்மையை பரிசோதிப்பதற்கு பயன்படுத்தப்படும் உள்ளீட்டு உபகரணம் எது
1. பட்டை குறிமுறை வாசிப்பான்  2. காந்த மையுரு வாசிப்பான்
3. ஒளியியல் வரியுரு கண்டறிதல்  4. ஒளியியல் குறி வாசிப்பான்

**09.** பின்வரும் சேமிப்பு சாதனங்களைக் கருதுக ?
A – BD  B - CD  C–DVD  D – பளிச்சீட்டுநினைவகம்
மேலுள்ள சாதனங்கள் தொடர்பில் எது / எவை ஒளியியல் சேமிப்புசாதனங்களாகும் ?
1. A,B மட்டும்  2. A மட்டும்  3. C,B,D மட்டும்  4. A,B,C மட்டும்

**10.** வன்தட்டை தாய்ப் பலகையுடன் தொடுப்பதற்கு பயன்படுத்தப்படும் தொடுப்பான் பின்வருவனவற்றில் எது
1. IDE  2. HDMI  3. USP  4. PS/2


**11.** Blu- ray இன் கொள்ளளவு யாது
1. 650 MB  2. 25 – 128 GB  3. 4.7 GB  4. 900 MB

**12.** செவிப் புலக் குதையில் ஒலியை உள்ளீடு செய்வதற்கு பயன்படுத்தும் குதையின் நிறம் யாது
1. பச்சை  2. நீலம்  3. ஊதா  4. வெள்ளை

**13.** பின்வருவனவற்றுள் தரவுப் பெறுவழிக் கதியில் வேகம் கூடியது எது ?
1. பதிவேட்டு நினைவகம்  2. பதுக்கு நினைவகம்  3. RAM  4. ROM

**14.** 0.789450 எனும் எண்ணின் அதிகூடிய (MSD), அதிகுறைந்த (LSD) இடப் பெறுமானம் முறையே
1. 7,0  2. 7, 5  3. 0, 0  4. 7,8

**15.** $23A_{16}$ என்னும் எண்ணை எண்ம எண்ணாக மாற்றினால் கிடைக்கப் பெறுவது
1. 1. $2310_8$  2. $1072_8$  3. $172_8$  4. $10072_8$

16.  இம் மின்சுற்றுக் குறிக்கும் தர்க்கவாயில் எது ?

1. OR 2. AND 3. NOT 4. NAND

17. இரண்டு /பல கணினி வலையமைப்புக்களுக்கு இடையே தொடுப்பை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் சாதனம்

1. மொடேம் 2. வழிப்படுத்தி 3. ஆளி 4. குவியம்

18. முழு இருவழிப் போக்கிற்கு உதாரணமாக அமைவது

1. ஆளி 2. குவியம் 3. வழிப்படுத்தி 4. எல்லாம் சரி

19. BCD குறிமுறையில் ஒருவரியுரு (Character) இனைப் பிரதிநிதித்துவம் செய்யத் தேவையான இழிவு பிற்றுக்களின் எண்ணிக்கை யாது

1. 8 2. 21 3. 4 4. 128

20. இருமஎண் $110010_2$ இற்கு சமவலுவான பதின்மஎண்

1. 96 2. 50 3. 101 4. 105

21. பின்வருவனவற்றுள் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளுக்கு உதாரணமாக அமைவது எது?

1. Iwork 2. LyX 3. Libre Office Writer 4. மேற்கூறிய யாவும்

22.  இவ் வுருவில் குறிக்கும் நேர்ப்படுத்தல் முறையே

1. மத்திய, இடது, வலது
2. மத்திய,வலது,சமமான
3. வலது, மத்திய, இடது
4. இடது, வலது,மத்திய

23. நீர் செயற்படுத்திக் கொண்டிருக்கும் இலத்திரனியல் முன்வைப்பு மென்பொருளுக்கு வெற்றுப் படவில்லை ஒன்றைச் சேர்ப்பதற்கு பயன்படுத்த வேண்டிய குறுக்குச் சாவி

1. Ctrl + M 2. Ctrl + N 3. Ctrl + B 4. Shift + V

24. இலத்திரனியல் முன்வைப்பு மென்பொருளில் பயன்படுத்தப்படும் இத் தளக்கோலங்களின் பெயர்கள் முறையே குறிப்பது 

1. வெற்றுத் தளக்கோலம் ,தலைப்பு மாத்திரம், தலைப்பும் உள்ளடக்கம்
2. தலைப்பு மாத்திரம், வெற்றுத் தளக்கோலம், தலைப்பும் இரு உள்ளடக்கம்
3. வெற்றுத் தளக்கோலம், தலைப்பும் இரு உள்ளடக்கம், தலைப்பு மாத்திரம்
4. வெற்றுத் தளக்கோலம், தலைப்பும் இரு உள்ளடக்கம், தலைப்பும் உள்ளடக்கம்

25. அட்டவணை ஒன்றின் புலம் இன்னோர் அட்டவணையின் பதிவைத் தனித்துவமாக அடையாளப்படுத்த முடியுமாயின் அப்புலம் ..................

1. முதன்மைச்சாவி 2. அந்நியச் சாவி 3. சேர்மானச்சாவி 4.

26. தரவுத் தளமொன்றில் குறிப்பிட்ட சில தகவல்களைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படும் இலக்குப் பொருள் யாது ?

1. அறிக்கை 2. வினவல் 3. அட்டவணை 4. படிவம்

27. விரிதாளொன்றில் (A3:C4) என வழங்கப்பட்ட கலங்களின் வீச்சினைக் கருதுக. இவ்வீச்சினுள் உள்ளடக்கப்படும் கலங்கள் பின்வருவனவற்றுள் எது?

1. A3,C5 மாத்திரம்
2. A3, B3,C3,C5 மாத்திரம்
3. A3,A4,C3,C5 மாத்திரம்
4. A3,B3,C3,A4,B4,C4 மாத்திரம்

28. பஸ்கால் செய்நிரல் மொழியில் ஒவ்வொரு கூற்றின் முடிவில் இடப்பட வேண்டியது

1. , (comma) 2. : (double colon) 3. Semicolon 4. Single quotation

29. பஸ்கால் செய்நிரல் மொழியில் பின்வருவனவற்றுள் எது ஒதுக்குச் சொற்களை கொண்ட தொகுதி

1. Begin, End, else, if
2. Begin, End, else, Real
3. Boolean, End, else, if
4. Char, String, then, if

30. பஸ்கால் செய்நிரலில் பயன்படுத்தப்படும் தரவுவகை அல்லாதது பின்வருவனவற்றில் எது


1. Real 2. Boolean 3. Array 4. Char

31. பின்வருவனவற்றுள் எது குறிப்பிட்ட நிபந்தனையொன்று பூர்த்தியடைந்திருக்கும் போதெல்லாம் அறிவுறுத்தல் வரிசை முறையொன்றை மீள் செய்யும் (repeat) செய்நிரல் நுட்பம்

1. தடம் (Loop)
2. தெரிவு (Selection)
3. வரிசை (Sequence)
4. தன்னியக்கம் ( Automatic)

32. பஸ்கால் செய்நிரல் மொழியில் விவரணத்தை (Comment) வகை குறிப்பது பின்வருவனவற்றுள் எது ?

1. + …….+ 2. (*………*) 3. <! ……> 4. // ……./// 

33.  என்ற குறியீடானது பாய்ச்சற் கோட்டுப் படத்தில் எதனைக் குறிக்கின்றது ?

1. ஆரம்பம் / முடிவு 2. தீர்மானம் எடுத்தல் 3. செயன்முறை 4. உள்ளீடு / வெளியீடு

34. பின்வருவனவற்றுள் எது முழு எண்வகுத்தல் வினைக்குறியாக(integer division operator) பஸ்கால் மொழியில் பயன்படுத்தப்படுகின்றது.

1. MOD 2. / 3. DIV 4. <>

35. HTML விரிவு யாது

1. Hyper Text Markup Language 2. High Text Markup Language
3. Hyper Task Markup Language 4. மேற்கூறிய எதுவும் இல்லை.

36. பின்வருவனவற்றில் எவ் ஒட்டுச் சோடி பந்தியை ஆரம்பிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது

1. <br> 2. <p> 3. <tr> 4. <bg>

37. பின்வருவனவற்றில் எவ் ஒட்டுச் சோடி தலைப்பை பெரிதாக காட்சிப்படுத்த பயன்படுகின்றது

1. <h6> 2. <h1> 3. <heading 1> 4. <head>

38. பின்வருவனவற்றில் எவ் ஒட்டுச் சோடியைப் பயன்படுத்துவதன் மூலம் இணையப் பக்கம் ஆரம்பிக்கப்படும்.

1. <body> 2. <html> 3. <title> 4. <form>

39. பின்வருவனவற்றில் எது விபரணப் பட்டியலைப் பயன்படுத்த உதவுகின்றது

1. <LL> 2. <DD> 3. <DL> 4. <DT>

40. பின்வரும் ஒட்டுச் சோடிகளில் எதற்குப் பின்னால் body ஒட்டு பயன்படுத்தப்படுகின்றது.

1. Title tag 2. Head tag 3. Form tag 4. Table tag

(40 புள்ளிகள்)

## பகுதி - II



முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. i) வடமாகாண பாடசாலைத் தரவுத் தளத்தில் தினசரி வரவுகள் பதிவு செய்யப்படுகின்றன. மேற்குறித்த தினசரி வரவுக்கான முறைவழியாக்கத்தின் மூலம் கிடைக்கக்கூடிய தகவல்களுக்கு இரண்டு உதாரணம் தருக ?

ii) அ) $6A9_{16}$ எண்ணை பதின்ம எண்ணாக மாற்றுக?

ஆ) $2345_{10}$ ஐ எண்ம சமவலுவாக மாற்றுக ?

iii) பின்வரும் உருக்களுக்கான பெயர்களை முகப்படையாளங்களுக்கு எதிரே எழுதுக.

| உரு |  |  |  |  |
|---|---|---|---|---|
| முகப்படையாளம் | A | B | C | D |

iv) வலையத் தளங்களைப் பயன்படுத்தி கற்றல் (Web Based Learning) மூலம் மாணவர் ஒருவருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை ?

v) மூடிய சுற்றுத் தொலைக்காட்சியின் (CCTV) பயன்கள் 2 தருக ?

vi) அ) ஒத்திசைக் கணினிகளுக்கு உதாரணம் 2 தருக ?

ஆ) இலக்கக் கணினிகளுக்கு உதாரணம் 2 தருக ?

vii) நிரல் A ஐ நிரல் B உடன் இணைக்குக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| Linux | பல்கொள்பணி பணிச்செயல்முறைமை |
| Windows 8 | தனி பயன்பாட்டுப் பணிசெயல் முறைமை |
| ATM | பல் பயன்பாட்டு பணிச்செயல் முறைமை |
| MS DOS | நிகழ்நேர பணிச்செயல் முறைமை |

viii) பின்வரும் தரவுத் தள அட்டவணையை கருத்திற் கொண்டு கீழுள்ள வினாவிற்கு விடை தருக.

அட்டவணை – வசதிக் கட்டண அட்டவணை

| அனுமதி இல | திகதி | மாணவர் பெயர் | பற்றுச்சீட்டு இல | கட்டணம் |
|---|---|---|---|---|
| ***12456*** | 2020/01/03 | க.காவேரி | C1245 | ***60.00*** |
| ***13195*** | 2020/01/30 | ஆ.பார்வதி | C1256 | ***60.00*** |
| ***14258*** | 2020/02/03 | ச. பகவதி | C1310 | ***48.00*** |




அ) மேற்குறித்த அட்டவணையின் பெயர் என்ன ?

ஆ) மேற்குறித்த அட்டவணையின் புலத்திற்கும் மிகப் பொருத்தமான தரவு வகையை (புலங்களின் பெயர் - தரவு வகை) எழுதுக.

ix) பஸ்கல் செய்நிரலில் கோவைகளை நடைமுறைப்படுத்தும்போது பின்பற்றப்படும் வினைக்குறிகளின் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| கோவை | வருவிளைவு |
|---|---|
| 6>=4 AND not(10>7) | |
| Not(6 mod 2>2) | |
| (50<60) or (38>25) | |
| Not((28>15) or (20<42) and (6>7)) | |

x) பொருத்தமான பதத்தை படிமங்களுடன் இணைக்குக.

| படிமம் | படிமத்தின் பதம் |
|---|---|
|  | Datasheet view |
|  | Worksheet |
|  | Primary Key |
|  | Design View |